2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, உலகத்தார்க்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் நல்லரசு, தனியார் தொழிற்சாலை துவங்க முன்வந்தால் என்னென்ன மானியங்கள் கிடைக்கும் என்பதை விளக்கமாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உலகத்தாராகிய தேருக்கும், அதற்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளுக்கும் சாரதியாக இருந்து, சாதனைகள்மூலம் சரித்திரம் படைத்து வாரி, வாரி வழங்கும் எங்கள் இதய தெய்வம், ஒன்பதாவது வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

52—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***35319—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் முதன்மை மையமாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது அந்த மையம் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பழுதடைந்த கட்டடங்களைச் சரி செய்வதற்கும், புதிதாக அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கும் ஆணையிட்டிருக்கின்ற காரணத்தினால், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு இந்த அங்கன்வாடி மையத்தை இடித்துவிட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்குக் கருத்துரு அனுப்பி, திருவண்ணாமலை மாவட்ட திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) அவர்கள் புதிய கட்டடம் கட்ட நிருவாக அனுமதி அளித்துள்ளார்கள். தற்போது இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு புதிய மையம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

53—

மகளிருக்கான கலைக் கல்லூரி

***35162—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*